No. of Printed Pages : 4

2024

200507 **7809**

பதிவு எண் | | | | | | |

## இரண்டாம் ஆண்டு

# தமிழ்மொழி கற்பித்தல்

கால அளவு : 3 மணி நேரம் மொத்த மதிப்பெண்கள் : 10

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அவற்றை அறை கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

## பகுதி - I

### பிரிவு - அ

குறிப்பு : **அனைத்து வினாக்களுக்கும், ஒவ்வொன்றிற்கும் 100 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.** **10x2=2**

1. 'வேட்ப' எனும் சொல்லின் பல்வேறு பொருள்களை எழுதுக.

2. படைப்புக்கற்பனை - விளக்கம் தருக.

3. பொருணயம், முட்குறை - இச்சொற்களைப் பிரித்தெழுதுக.

4. வினையெச்சத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

5. முருகா வா!, கண்ணன் பாடினான் - இவை எவ்வகைத் தொடர் என்பதனை எழுதுக.

6. உவமை அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

7. 'கவிதை' குறித்து கவிமணி குறிப்பிடும் பாடலை எழுதுக.

8. பேச்சாற்றலை வளர்க்க எத்தகைய பயிற்சிகளை வழங்கலாம் ?

[ திருப்புக

9. ஈராறு - இச்சொல்லைப் பிரித்தெழுதி புணர்ச்சிவிதி தருக.

10. மரூஉ - எடுத்துக்காட்டுடன் விளக்குக.

## பிரிவு - ஆ

**குறிப்பு : எவையேனும் ஐந்து வினாக்களுக்கு, ஒவ்வொன்றுக்கும் 200 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.** **5x4=20**

11. கீழ்க்காணும் உரைப் பகுதியைப் படித்து அதன் உரைநயத்தை விளக்குக.

''கானகத்தின் கவினைக் கானகத்திலன்றி வேறெங்கும் காணல் இயலாது. எத்தனை வடிவான இலைகள்! எத்தனை நிறமான மலர்கள்! எத்தனை சுவையான காய்கள்! எத்தனை இனிப்பான பழங்கள்! எத்தனை வகையான மரங்கள் செடிகள் கொடிகள்! அம்மம்ம! இறைவன் படைப்பின் பல்வேறு வகையான வியத்தகு அமைப்பும் அழகும் ஒருங்கு பொதுளிய அடவிகளின் விழுமிய தன்மை எங்ஙனம் கூறுவேம்! எவ்வாறு காட்டுவேம்! கானகங்களின் அடர்ந்துயர்ந்த தோற்றத்தைக் காண்கையில் உள்ளமும் உணர்வும் மேலுயர்ந்து செல்கின்றன! வியப்பும் புதுமையும் கருத்தைக் கவர்ந்திழுக்கின்றன!

12. சிறந்த பேச்சாளராக உருவாவதற்கு அ.கி. பரந்தாமனார் கூறும் அறிவுரைகளை எழுதுக.

13. கவிதை எழுதுவதற்கு எத்தகைய பயிற்சிகளை வழங்குவீர் ?

14. பாடங் கற்பித்தார், கானகஞ் சென்றார் - இச்சொற்களைப் பிரித்தெழுதி புணர்ச்சிவிதி தருக.

15. பண்புத் தொகை, இருபெயரொட்டுப் பண்புத் தொகை ஆகியவற்றை எடுத்துக்காட்டு-களுடன் விளக்குக.

16. கீழ்க்காணும் செய்யுளை நயம் பாராட்டுக.

செங்கதிரோன் மலையிடையில் செம்மை தேக்கும்
    செடிகொடிகள் பொன்பூக்கும்; திரும்பும் புட்கள்
மங்கிவரும் ஒளிக்கெதிரே மேற்கு வானில்
    மையிருட்டுக் கைந்நீட்டும்; வானம் பூத்துத்
தொங்குகின்ற பீர்க்கம்பூப் போலக் கண்முன்
    தொடுவானில் கீழ்த்திசையில் ஒளியில் மங்கி
அங்கொன்றும் இங்கொன்றும் முன்னர்த் தோன்றி
    அடுத்தநொடி வான்நிறையும் விண்மீன் கூட்டம்!

17. மெய்யீற்றுப் புணர்ச்சியில் மகர ஈறு பெறும் மாற்றங்களை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

18. செய்யுளை உரைநடைப்படுத்தும்போது கவனத்திற் கொள்ள வேண்டியவை யாவை ?

## பகுதி - II

### பிரிவு - அ

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் ஒவ்வொன்றிற்கும் 100 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.** **10x2=20**

19. குறைந்தபட்சக் கற்றல் இலக்குகள் என்றால் என்ன ?

20. நாற்பால் – இத்தொகைச் சொல்லை விரித்தெழுதுக.

21. பூங்காவனம் – இச்சொல்லில் மறைந்துள்ள எவையேனும் நான்கு சொல்லை எடுத்தெழுதுக.

22. பச்சைப்பசேல், கண்ணுங்கருத்தும் என்ற இணைச் சொற்களை சொற்றொடரில் அமைத்து எழுதுக.

23. கடிதம் எழுதுவதன் நோக்கங்களுள் எவையேனும் நான்கினைக் குறிப்பிடுக.

24. எளிமையாக்கல் காரணமாக வரிவடிவத்தில் ஏற்படும் பிழைகளைக் குறிப்பிடுக.

25. (அ) அந்நாட்டை தீ இரையாக்கினர்
(ஆ) ஒரு பேருந்து அவர்களின் நோக்கி வந்தது.
- இத்தொடர்களில் உள்ள பிழைகளை நீக்கி, காரணத்துடன் விளக்குக.

26. கணினி மொழிகள் நான்கினை எழுதுக.

27. 'தமிழ் 99 முறை' – பற்றி எழுதுக.

28. குழந்தைகளுக்கான கற்பித்தல் பயிற்சியை மேற்கொள்ள உதவும் இணையதள முகவரிகளுள் எவையேனும் நான்கினை எழுதுக.

[ திருப்புக

## பிரிவு - ஆ

**குறிப்பு : எவையேனும் ஐந்து வினாக்களுக்கு, ஒவ்வொன்றிற்கும் 200 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.** **5x4=20**

29. மொழிப் பயிற்றாய்வுக் கூடத்தின் அமைப்பை விளக்குக.

30. பாடஏற்பாட்டின் இயல்புகள் யாவை ?

31. சொற்களஞ்சியம் பெருக்கும் முறைகளுள் எவையேனும் நான்கினை விவரி.

32. தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் தோற்றம் மற்றும் குறிக்கோள்கள் பற்றி எழுதுக.

33. கற்பித்தலில் பிழைகளைக் களைவதற்கான படிநிலைகளை எழுதுக.

34. கற்பித்தலில் மென்பொருள் பயன்பாடு குறித்து எழுதுக.

35. உலகத் தமிழர் பயன்பாட்டில் இணையம் பற்றி எழுதுக.

36. கட்டுரை எழுதும் வழிமுறைகள் யாவை ?

## பகுதி - III

**குறிப்பு : ஒவ்வொரு வினாவிற்கும் 500 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.** **2x10=20**

37. (அ) நல்ல பாடத் திட்டத்தின் முக்கியத்துவம் குறித்து விளக்குக.

**அல்லது**

(ஆ) கவிதை எழுதும் திறனை வளர்க்கும் உத்திகள் குறித்து விவரித்து எழுதுக.

38. (அ) மொழிப் பயிற்றாய்வுக் கூடத்தின் சிறப்புத் தன்மைகள், பயன்கள், பயிற்சிகள் குறித்து விளக்கம் தருக.

**அல்லது**

(ஆ) மொழிப் பாடத்தில் புறவயத்தேர்வை அமைக்கும்முறை மற்றும் புறவய வினாக்களின் நிறைகள், குறைகள் குறித்து எழுதுக.

-oOo-